மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

திருச்சி மாவட்டம், பச்சைமலைப் பகுதியில் அனைத்து 45 குக்கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது. அதில் 19 குக்கிராமங்கள் வழக்கமான முறையில் மின்வசதி செய்யப்பட்டுள்ளது. 26 குக்கிராமங்களுக்கு சூரிய ஒளிமூலம் மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது.

281–

வேதாரண்யம் உப்பளப் பகுதிகளில் நிலவரி வசூல் செய்தல்

***10499–திரு. பி.வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வேதாரண்யம் பகுதியிலுள்ள உப்பளங்களில் தமிழக அரசுக்குச் சொந்தமான இடங்களில் எத்தனை ஆண்டுகள் நிலவரி வசூல் செய்யப்படவில்லை ?

(ஆ) அதனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்புத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலுள்ளதால் வேதாரண்யம் வட்டத்திலுள்ள உப்பளங்களில் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான இடங்களில் 1984-ம் ஆண்டு முதல் நிலவரி வசூலிக்கப்படவில்லை.

(ஆ) குத்தகைத் தொகை ரூ. 34,37, 243/- (ரூபாய் முப்பத்து நான்கு இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து இருநூற்று நாற்பத்து மூன்று மட்டும்) பாக்கி உள்ளது.

291–

சேலம் மாவட்டம், தலைவாசலில் அரசு விதைப் பண்ணை அமைத்தல்.

***25696-திரு. கே. கந்தசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் மாவட்டம், தலைவாசலில் அரசு விதைப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?